வங்கத்தில் அதைச் செய்தார்களா, இதைச் செய்தார்களா என்றெல்லாம் கேட்டார்கள்; மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களோடு இருந்தவர்களெல்லாம் கேட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அன்றைக்குத் தேர்தலில் கிடைத்த படிப்பினை என்ன? பல்வேறு முறையில் மேற்கு வங்கத்தைக் குறை சொன்னவர்கள் இன்று மக்களால் வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கு வங்க அரசுக்கு எதிராக, மம்தா பானர்ஜியும், பி.ஜே.பி.-யும் எவ்வளவோ முயற்சித்த பிறகும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. அந்தப் படிப்பினை உங்களுக்கும் இருக்கட்டும். இதைத்தான் உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

4. அறிவிப்பு

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4--30 மணி அளவில், சட்டமன்றப் பேரவையை ஒட்டிய மண்டபத்தில் உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் பிற்பகல் 4--30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1--38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4--30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் **கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*